இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 134 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 08 – திங்கள்கிழமை 23 டிசம்பர் 2024 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 134: Thiruvalluvar Year - 2055 - Margazhi 08 - Monday 23 December 2024 - Madurai 16 Pages ₹ 5.00

## ஏழாவது முறை ஆட்சி அமைக்க வேண்டும் என்பதுதான் நம் இலக்கு!

# வெல்வோம் 200; படைப்போம் வரலாறு!

## தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி உரை!




கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.12.2024) சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றினார். இக்கூட்டத்தில், கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழகப் பொருளாளரும். மக்களவைக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான.கே.என் நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் மற்றும் தலைமை கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

சென்னை, டிச.23-

**தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் தலைமை உரையாற்றிய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 'ஏழாவது முறை ஆட்சி அமைப்பதுதான் நம் இலக்கு' என்றும் 'வெல்வோம் 200; படைப்போம் வரலாறு' என்றும் தெரிவித்தார்.**

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.12. 2024) சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

பல நேரங்களில் பல கூட்டங்களில் உங்களை நான் சந்தித்திருந்தாலும், 2024 நாடாளுமன்றத் தேர்தலில் உங்களில் ஒருவனான என்னுடைய கட்டளையை ஏற்று நாற்பதுக்கு நாற்பதிலும் வெற்றியைப் பெற்றுத் தந்த உடன்பிறப்புகளான உங்களை இந்த செயற்குழுக் கூட்டத்தில் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இங்கு பல பேர் பல கருத்துகளைப் பேசியிருக்கிறீர்கள். இப்படி நம்முடைய கருத்துகளைப் பகிர்ந்து, ஆக்கப்பூர்வமான கருத்துப் பரிமாற்றங்களால் கழகத்தின் அடுத்தடுத்த நகர்வுகளைத் தீர்மானிக்கும் முடிவுகளை எடுக்கும் கூட்டங்கள்தான், செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டங்கள்!

**ஏழாவது முறை ஆட்சி அமைப்பதே நம் இலக்கு!**

கழகத்துக்கு நன்மை பயக்கும், வெற்றிகளை விளைவிக்கும் கருத்துகளை அனைவரும் உங்கள் உள்ளங்களில் ஏற்றிச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்!

சட்டமன்றத் தேர்தல் களத்தை நாம் எதிர்கொள்ள இன்னும் ஒன்றரை ஆண்டுகள்தான் இருக்கிறது. ஏழாவது முறை ஆட்சி அமைக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய இலக்கு! சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளில் நம் கூட்டணி வெல்லும்; 2026இல் வெற்றி நமதுதான்! என்னுடைய இந்த நம்பிக்கைக்கு ஆணிவேர் நீங்கள்தான்! களத்தில் நாம் கொடுக்கப் போகும் உழைப்புதான், நம்முடைய வெற்றியை உறுதி செய்யப் போகிறது!

"கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எதிரிகளே இல்லை" என்று ஆணவத்தில் பேசுகிறவன் இல்லை நான்; எத்தனை படைகள் வந்தாலும், அவர்கள் எத்தனை எத்தனை பெரிய திட்டங்களோடு வந்தாலும், அவர்களின் வியூகங்களை முறியடிக்கும் கலைஞரின் படை என்னிடம்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

---

## 2026 சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற இன்றே புறப்படுவீர்! – ஒன்றிய அரசே

# 'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டத்தை கை விடுக!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் வலியுறுத்தல்!

சென்னை, டிச.23-

**ஜனநாயகத்தையும் நேர்மையான- சுதந்திரமான தேர்தலையும் தகர்க்க நினைக்கும் 'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டத்தை கைவிடுக என்பன உள்ளிட்ட 12 தீர்மானங்கள், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் வலியுறுத்தி நிறைவேற்றப் பட்டன.**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் "தி.மு.க. செயற்குழுக் கூட்டம்" நேற்று (22.12.2024) காலை 10.00 மணி அளவில் சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

அதுபோது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு: -

### தீர்மானம் : 1

**அண்ணல் அம்பேத்கரை அவதூறு செய்து - அவரது தியாகத்தை இழிவுபடுத்திய உள்துறை அமைச்சருக்கு தி.மு.க. செயற்குழு கண்டனம்.**

அரசியல் சட்டத்தின் தந்தை என்று போற்றப்படும் அடித்தட்டு மக்களின் குரலாக அரசியல் நிர்ணய சபையில் எதிரொலித்து இரவு பகலாக பாடுபட்டு உலக அரங்கில் இந்திய ஜனநாயகம் ஒளிரும் வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க அரசியல் சட்டத்தை உருவாக்கித் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களை தரம் தாழ்ந்து, அவதூறாகப் பேசி அவரது தியாகத்தை இழிவுபடுத்தியிருக்கும் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிற்கு இந்தச் செயற்குழு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. இச்செய்தி கிடைத்தவுடன் உணர்ச்சிப் பிழம்பாக பீறிட்டுக் கிளம்பி மாநிலமெங்கும் அனல் பறக்கும் ஆவேசப் போராட்டத்தை நடத்திய திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் அப்போராட்டங்களில் தன்னெழுச்சியாக திரண்ட மக்கள், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் கண்டனக் குரல் எழுப்பிய தி.மு.க. மற்றும் தோழமைக் கட்சியின் எம்.பி.க்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இந்தச் செயற்குழு தனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஜனநாயகத்தின் திருக்கோவிலான நாடாளுமன்றத்தில் நாட்டின் உள்துறை அமைச்சரே இப்படி அண்ணல் அம்பேத்கரை இழிவுபடுத்தி பேசி அருவருக்கத்தக்க அநாகரீக அரசியலை அரங்கேற்றியிருப்பது நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு பா.ஜ.க. ஆட்சியில் ஏற்பட்டுள்ள மீளாத் தலைகுனிவு. எவரும் ஏற்கமுடியாத எந்தக் காலத்திலும் நடைபெற்றிடாத ஒரு உள்துறை அமைச்சரின் பேச்சை திசை திருப்ப நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் பா.ஜ.க. நடத்தும் நாடகங்கள் அதை விட கேலிக்கூத்தானது என இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

> ## ஃபெஞ்சல் புயலின்போது முன்கள வீரராக செயலாற்றிய முதல்வருக்கு பாராட்டு!
>
> 
>
> **ஃபெஞ்சல் புயலில் தானே களத்திற்குச் சென்று ஆய்வு செய்து மக்களுக்கு ஆறுதல் தெரிவித்து அவர்களின் குறைகளைத் தீர்த்து வைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட 'திராவிட மாடல்' அரசின் தலைமைப் பண்பு நிறைந்த முன்கள வீரர் முதலமைச்சர் மற்றும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இந்தச் செயற்குழு தனது மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.**

### தீர்மானம் : 2

**ஃபெஞ்சல் புயலில் முன்கள வீரராக நின்று மக்களைக் காப்பாற்றிய கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டு!**

தமிழ்நாட்டில் விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்திய ஃபெஞ்சல் புயலை நிர்வாக திறமையுடனும், நேரடி கள ஆய்வுகள் மூலமும் மிகக் கவனமாக கையாண்டு உரிய முன்னெச்சரிக்கை வெள்ள அபாய அறிவிப்புகளை வெளியிட்டு சாத்தனூர் அணையை படிப்படியாகத் திறந்து மழை வெள்ளம் மற்றும் அணை நீரால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.2000 உதவித் தொகை வழங்கி பாதிக்கப்பட்ட மக்களின் குரலுக்கு ஓடோடிச் சென்று ஆறுதல் தெரிவித்து, அவர்களோடு இக்கட்டான நிலையில் துணை நின்று உயிரிழப்பையும், உடைமைகள் இழப்பையும் பெருமளவில் தவிர்த்து தங்கள் ஒரு மாத ஊதியத்தை பேரிடர் நிதிக்கு அளித்து தமிழ்நாட்டு மக்களை காப்பாற்றுவதே தங்களின் தலையாய பணி என்று முன்களவரிசையில் நின்ற சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மக்கள் குறைதீர்க்க களத்தில் நின்ற துணை முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், கழக நிர்வாகிகளுக்கும் அனைவருக்கும் தலைமை தாங்கி

தொடர்ச்சி 4ஆம் பக்கம்